பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 01 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறார்.

**2.** உலகின் மின்னணு மற்றும் திறன் மேம்பாட்டு மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

**3.** தமிழகத்தில் குற்றச் சம்பவங்கள் நடைபெறாத வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

**4.** அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**5.** தமிழ்நாடு - பரோடா அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி சேலத்தில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இதை தாக்கல் செய்கிறார்.

தலைமைப் பொருளாதார ஆலோசகரின் வழிகாட்டுதலின்படி மத்திய நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரத்துறை இந்த ஆய்வறிக்கையை தயாரித்துள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் குறித்த விரிவான அம்சங்கள் இந்த பொருளாதார ஆய்வறிக்கையில் இடம்பெறுகிறது.

வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது.

<<<<>>>>

புதிய ஆதார் செயலி சேவையை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா புதுதில்லியில் நேற்று தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், ஆதார் மாதிரியை செயல்படுத்தும் வகையில் இந்தியாவுடன் கூட்டாண்மை சேர பல்வேறு நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவித்தார்.

உலகின் மின்னணு மற்றும் திறன் மேம்பாட்டு மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த உச்சிமாநாடு, நமது நாட்டை உலகளாவிய சேவை வழங்குநராக உலகிற்கு எடுத்துக்காட்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய ஆதார் செயலி மூலம் பயனாளிகள் ஆதார் குறித்த தகவல்களை மேலும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்றும், மற்றவர்களுடன் பாதுகாப்புடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்றும் திரு. ஜிதின் பிரசாதா கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் குற்றச் சம்பவங்கள் நடைபெறாத வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சென்னை தரமணி பகுதியில் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் 3 பேர் கொடூரமாக கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

சமீபத்தில் வடமாநில இளைஞர் ஒருவரை கொடூரமாக தாக்கிய சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த சூழலில் தற்போது இச்சம்பவம் நிகழ்ந்திருப்பது, தமிழக காவல்துறை மற்றும் அதன் சட்டம்-ஒழுங்கு பாதுகாப்பு செயல்பாடு எந்த நிலையில் உள்ளது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவத்தில் ஈடுபட்ட மதுபோதைக் கும்பலையும், சட்டம்-ஒழுங்கை பாதுகாக்க தவறுகின்ற தமிழக காவல்துறையையும் தாம் வன்மையாக கண்டிப்பதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதற்கிடையே தரமணியில் நிகழ்ந்த கொலை சம்பவம் அதிர்ச்சியளிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மாநிலத்தில் திமுக ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதை இது எடுத்துக்காட்டுவதாக கூறியுள்ளார்.

மனித சமூகத்திற்கு இழுக்கு ஏற்படும் வகையில் இந்த கொடூர சம்பவத்தில் ஈடுபட்டவர்களை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாவண்ணம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை தரமணியில் நடைபெற்ற இச்சம்பவம், மாநில அரசின் தோல்வியை கோடிட்டு காட்டுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தலைநகரில் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் அரசு தலைமை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் கட்டணத்துடன் கூடிய மனநல பாதிப்பு சிகிச்சை மையத்தை தொடங்கி வைத்து பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

அரசின் மருத்துவ சேவையை நாள்தோறும் ஏழு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்துவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து கடந்த 230 நாட்களாக திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 800 கன அடி நீர் திறக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Sound Byte - Vijayakumar - 53 Sec)**

<<<<>>>>

திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலத்தையொட்டி முன்பதிவில்லா சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி விழுப்புரத்தில் இருந்து வரும் ஒன்றாம் தேதி காலை மணி **10.10**க்கு இந்த ரயில் இயக்கப்படுகிறது.

மறுமார்க்கத்தில் அன்று பிற்பகல் மணி **12.40**க்கு திருவண்ணாமலையில் இருந்து சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று அந்நாடு எச்சரித்துள்ளது.

--------------

தென்கொரியாவில் லஞ்சம் பெற்ற வழக்கில் அந்நாட்டு முன்னாள் அதிபர் **Yoon Suk Yeol**-ன் மனைவி **Kim Keon Hee**-க்கு அந்நாட்டு நீதிமன்றம் **20** மாத சிறை தண்டனை விதித்துள்ளது.

--------------

விமான விபத்தில் உயிரிழந்த மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவாரின் இறுதிச்சடங்கு இன்று பாராமதியில் நடைபெறுகிறது.

--------------

நாடு முழுவதும் நடப்பு ரபி பருவத்தில் இதுவரை **660** லட்சம் ஹெக்டேருக்கும் மேலான பரப்பளவிற்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------

தருமபுரி மாவட்டம் மாட்டலாம்பட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து ஆட்சியர் திரு. சதீஷ் எடுத்துரைத்தார்.

-------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் கருடசேவை நேற்றிரவு வெகுவிமரிசையாக நடைபெற்றது.

-------------

நாமக்கல் மாவட்டம் பொட்டிரெட்டி பகுதியில் **15** வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் குற்றவாளிக்கு **30** ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

-------------

தமிழக அரசின் முத்திரை சின்னமாக விளங்கக்கூடிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ராஜகோபுரத்திற்கு பாலாலயம் நடைபெற்றது.

--------------

மத்திய அரசின் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களின் சார்பில் கார்பன் உமிழ்வு குறைப்பு குறித்த பயிலரங்கம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது.

--------------

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி செயலி உருவாக்கம் குறித்த 3 நாள் பயிற்சி சென்னை ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் அடுத்த மாதம் 4ஆம் தேதி முதல் நடைபெறுகிறது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு - பரோடா அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

சேலத்தில் நடைபெற உள்ள இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

---------------

இந்திய அணிக்கு எதிரான **4**வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி **50** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்புக்கு **215** ரன் எடுத்தது.

**216** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி **18** புள்ளி **4** ஓவரில் **165** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**5** போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா **3-1** என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

**5**வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டி நாளை மறுநாள் திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ளது.

---------------

சந்தோஷ் கோப்பைக்கான கால்பந்து போட்டியில் தமிழ்நாடு - மேற்குவங்க அணிகளுக்கு இடையேயான ஆட்டம் **1-1** என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

-------------

பஹ்ரைனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் பாந்தியா - சாகேத் மைனேனி இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-3, 6-7, 10-7 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய இணையான ஜீவன் நெடுஞ்செழியன் - ராம்குமார் ராமநாதன் இணையை வென்றது.

-------------

ஹைதராபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Ishaq Eqbal** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**